Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

Price Rs. 8/-

மலர் - 23 மே 2010 இதழ் - 5

## புதின்மூன்றாம் வேனிற்கால வேதாகம முகாம் - மே 3-5, 2010

13th Summer Bible Camp - 2010 Yelagiri Hills.




முகாமில் பங்குபெற்றோரில் ஒரு பகுதி

# திருமறை ஆசான்

## இதழ் ஆசிரியரின்

# திருமறை தியானம்

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**





## ஆசானின் அறிவுரையில்...


1. ஆசிரியர் உரை ........ 1
2. பாடுவது எப்படி ? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 18
5. சிறுவர் பகுதி ........ 22
6. கொடுத்தல் ஒரு வேதாகம பாடம் ........ 24
7. துன்பப்படும் கர்த்தருடைய தாசன் ........ 28
8. உண்மையான ஆவிக்குரிய தன்மை ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 23 MAY - 2010 Issue - 5


## பதின்மூன்றாம் வேனிற்கால வேதாகம முகாம் பற்றிய துளிகள்

### மே 3-5-2010 ஏலகிரி மலை

| | | |
|---|---|---|
| **கலந்து கொண்ட மாநிலங்கள்** | – | **3** |
| **கலந்து கொண்ட பிராந்திய சபைகள்** | – | **49** |
| **கலந்து கொண்ட பட்டணங்கள்** | – | **52** |
| **கலந்து கொண்ட நபர்கள்** | – | **500 க்கு மேல்** |
| **கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தோர்** | – | **12** |
| **கீழ்ப்படிதலால் பயனடைந்த சபைகள்** | – | **8** |

இம்முகாமின் வெற்றிக்காக ஊக்கமாய் ஜெபித்த, உற்சாகமாய் கொடுத்து உதவிய உங்கள் ஒவ்வொருவருக்கும், தேவனுடைய வார்த்தைகளை வல்லமையாய் எடுத்து விளம்பிய **தேவதாசர்கள்** யாவருக்கும், விசுவாசிகளை திரளாக அழைத்து வந்த கனத்திற்குரிய **ஊழிய சகோதரர்கள்** அனைவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– ஆசிரியர்

ஆசிரியர் உரை

# "என் பிதாவுக்கு அவசியமானவைகளில்...."

இப்பூமியின் வாழ்க்கையில், ஒருவருக்கு எது அவசியம். எது அவசியமில்லை என்பதில் எல்லோருக்கும் ஏகமனதான கருத்து இருப்பதில்லை. ஏனெனில், ஒருவருக்கு அவசியமான தாகத் தெரிவது, மற்றொருவருக்கு அலட்சியமானதாகத் தெரியும். வேறொருவருக்குத் தேவையில்லாததாகத் தெரியும் ஒன்று, இன்னொருவருக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும். நான் கூறும் இக்கருத்து, ஏதோ இந்த சரீர வாழ்வுக்கு மாத்திரம் பொருந்துகிற ஒன்று என நாம் நினைக்கத் தேவையில்லை. ஒருவருடைய ஆன்மீக வாழ்க்கையிலும் இக்கூற்று அப்படியே எதிரொலிப்பதாகவே உள்ளது. ஆம், பக்தி காரியங்களில் கூட எல்லோருக்கும் ஒரே விதமான நிலை இருப்பதில்லை. தன்னை உண்டாக்கினவருக்குப் பயந்து, அவர் பாதம் பணிந்து நடப்பது ஒரு சாராருக்கு அவசியமானதாகவும், வேறொரு சாராருக்கு அவசியமற்றதாகவும் இருக்கிறது. இன்னும், மனிதர்களைப் பொறுத்தளவில் இந்த பக்தி காரியங்கள் வயதுக்கேற்றாற்போல் மாறுபடுவதாகவும் உள்ளது. எப்படியெனில், இளம் வயது பூமிக் குண்டானவைகளை அனுபவிப்பதற்கான பருவம் என்றும், முதிர் வயது பரமனை அண்ணாந்து பார்க்கும் காலம் என்றும் எழுதப் படாத ஒரு சட்டம் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

பரிசுத்த வேதாகமம் இக்கருத்துக்கு முற்றிலும் முரண்பட் டிருந்தாலும் மிகப் பெரும்பாலானவர்களின் பக்திக் காரியங்கள் இக்கருத்தை ஒட்டியே அமைந்துள்ளது.

ஒருவேளை, இந்நிலை மிகப்பெரும்பாலோரால் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தாலும், இப்பொதுக் கருத்தி லிருந்து முற்றிலும் விலகி, தனித்துவம் வாய்ந்த ஓர் ஒப்பற்ற வாழ்க்கையை இயேசுவானவர் தனது பால பருவத்தைக் கடந்த நிலையிலேயே வாழ்ந்து காட்டியுள்ளார். ஆம், தனக்குப் பன்னிரண்டே வயது ஆன நிலையில், மாம்ச சிந்தையிலிருந்தும், சுயசித்தம் செய்வதிலிருந்தும் முற்றிலும் தன்னை விடுவித்து, என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியது அவசியம் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இயேசுவானவர் எந்தச் சூழ்நிலையில் இப்படிச் சொன்னார் என்பதைத் தெரிந்து கொள்ள நமது வழக்கத்தின்படியாக, இதன் பின்னணி குறித்து கொஞ்சம் பார்த்து விடுவோம்.

ஸ்திரீகளுக்குள் பாக்கியவதியாயிருந்த இயேசுவின் தாயாகிய மரியாளும், இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய

யோசேப்பும் தேவனுக்குப் பயந்து நீதியாக வாழ்ந்தவர்கள். (மத் 1:19, லூக். 1:28). தேவனுக்குப் பயந்து வாழ்பவர்கள், தேவ கட்டளைகளுக்கு எப்பொழுதும் கீழ்ப்படிந்து நடப்பார்கள். இவர் களிருவரும் மோசேயின் பிரமாணத்தின் கீழாக வாழ்ந்தவர்கள். பழைய பிரமாணத்தின்படி பக்தியுள்ள யூதர்கள் பண்டிகைக் கொண்டாட்டங்களுக்கு எருசலேம் செல்ல வேண்டியது கட்டா யம். (யாத். 34:23) ஆகவே, பக்தி காரியங்களில் மிஞ்சினவர் களாகிய இவர்களிருவரும், பண்டிகைக்காக வருடந்தோறும் எருசலேம் போவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவர்க ளோடு இயேசுவானவர் பண்டிகைக்குப் போனது இதுதான் முதல் முறை போல் தெரிகிறது. அப்படிப்பண்டிகை கொண்டாட்டங்கள் முடிந்து ஊர் திரும்பும்போது, இயேசு தன்னோடு இருக்கி றாரா இல்லையா என்பதை உறுதி செய்வதில் யோசேப்பும், மரியாளும் கோட்டை விட்டனர். இப்படித்தான் அநேகர் தங்கள் ஆன்மீக வாழ்க்கையில் இருந்து கொண்டுள்ளனர். இயேசுவும், அவருடைய உபதேசங்களும் தங்களுடைய பக்தி வாழ்க்கையில் உள்ளதா என்று உறுதி செய்து கொள்வதில்லை.

ஆம், இயேசு பிரயாணக்காரரின் கூட்டத்தில் இருப்பார் என்று இவர்களாகவே எண்ணிக்கொண்டு ஊர் திரும்பிக் கொண் டிருந்தனர். ஆனால், இயேசுவோ எருசலேமிலேயே இருந்து விட்டார். பிறகு, ஒரு வழியாக அவரைத் தேடிக் கொண்டு எருச லேம் போனபோது தான் அவர்களுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. அங்கே, 12 வயதே நிரம்பிய இயேசுவானவர் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கிறதையும் அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினவவும் கண்டார்கள். இயேசுவின் புத்தியும், மாறுத்தரமும் வயதும், அறிவும், அனுபவமும் கொண்ட போத கர்களுக்கு பிரமிப்பையும், தாய் தகப்பன்மாருக்கு அடக்க முடியாத ஆச்சரியத்தையும் தந்தது (லூக். 2:42-48).

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தான் இயேசுவின் தாயாகிய மரியாள் அவரை நோக்கி; மகனே, ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோ டே உன்னைத் தேடினோமே என்றாள். இங்கே மரியாள் ஆச்சரி யமடைந்ததும், கவலைப்பட்டதும் நமக்கு ஒரு வகையில் ஆச்சரி யத்தைக் கொடுப்பதாகவே உள்ளது. ஏனெனில், இவள் இயேசு வைக் கர்ப்பந்தரித்த விதம், இயேசுவின் பிறப்பு பற்றி இவளுக் குச் சொல்லப்பட்ட காரியங்கள், அவர் பிறந்த போது கிடைக்கப் பெற்ற தேவனுடைய பாதுகாப்பு போன்றவைகள் இவர் முழுக்க முழுக்க விசேஷமானவர் என்று மரியாளுக்குத் புரிந்திருக்க வேண்டும். ஏனோ, மரியாள் இந்த உண்மையை உணராத ஒரு சராசரித் தாயாக இருந்துள்ளாள். இது நமக்கு ஆச்சரியமாக உள்ளது.

சரி, மரியாள் இப்படிக் கவலையோடு கேட்டதற்குப் பதிலாகத்தான் பன்னிரண்டு வயது இயேசு, "நீங்கள் ஏன் **என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான்**

**இருக்க வேண்டியதென்று அறியீர்களா?"** என்றார் (லூக் 2:49). இங்கே, "பிதாவுக்கடுத்தவைகளில்" என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதற்கு மூலமொழியாகிய கிரேக்கத்தில், "பிதாவுக்கு அவசியமானவைகளில்" என்றுள்ளது. இயேசுவானவர் இப்பூமியின் வாழ்க்கையில் பேசினதாக, ஆவியானவரால் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் "முதல் வார்த்தைகள்" இவைகள் தான். இயேசுவானவர் தனது பாலபருவம் முடிவடைந்திருந்த அந்த நிலையிலே, பக்தி காரியங்களில் எவ்வளவு முதிர்ச்சிய டைந்தவராக இருந்திருக்கிறார் என்று நாம் கவனிப்பது அவசியம். இதை வாசித்துக் கொண்டிருக்கிற நம் ஒவ்வொருவ ருக்கும் எவ்வளவு வயதாகிறது? இந்த வயதில் நம்முடைய பக்தி காரியங்களின் நிலை எந்த நிலையில் உள்ளது? தற்பரிசோதனை செய்வது நல்லது.

ஒரு சமயம், பல தெய்வ வணக்கத்தில் எக்கச்சக்கமான ஈடுபாடு கொண்ட மாற்று மதத்தைச் சேர்ந்த ஒரு வங்கி அதிகாரி யை நான் சில ஆண்டுகளுக்கு முன் சந்தித்தேன். அப்பொழுது கிறிஸ்தவத்தின் சிறப்பு குறித்து அவரோடு பேசிக் கொண்டிருந் தேன். என் தரப்பு காரியங்களை அப்படியே ஏற்றுக் கொள்ளவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் தவித்த அந்த அதிகாரி எல்லா மதங்களிலும் "பிளஸ்" மற்றும் "மைனஸ்" உண்டு என்று சொன்ன கையோடு, உங்கள் இயேசுவைப் பற்றிக் கூட அவர் 12 வயது முதல் 30 வயது வரை என்ன செய்தார் என்ற விபரம் கொடுக்கப்படவில்லை. அதுதான் ஒரு மனிதனுடைய வாழ்க்கை யில் பலவீனமான பருவம் என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டு தன் சத்தற்ற வாதத்தை வலுப்படுத்த முயன்றார். கிறிஸ்தவத் தின் தனித்தன்மையை தங்களுடைய பகுத்தறிவாலும், நேர்மைச் சிந்தையாலும் ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள், இப்படித்தான் உப்பு சப்பற்ற எதையாவது கூறி பிடி கொடுக்காமல் நழுவ முயற்சிப்பர். ஆனால், இங்கே பார்க்கிறோம், பொய்யுரையாத வேத எழுத்துக்கள், இயேசுவானவர் தன்னுடைய 12வது வயதி லிருந்தே பிதாவுக்கு அவசியமானவைகளில் தன்னை முழுமை யாக ஈடுபடுத்தி வந்துள்ளார் என்று கூறுகிறது.

சரி, "என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டி யதென்று அறியீர்களா" என்று தனது 12-வயதில் சொன்ன இயேசு வானவர், பிதாவுக்கு அவசியமானவைகளில் தன்னை ஈடுபடுத் திய ஒரு வாழ்க்கையை நடத்தினாரா? ஆம், நிச்சயமாகவே நடத்தியுள்ளார். இதை அறிந்து கொள்ள, நாம் யோவான் 17-ம் அதிகாரத்திற்கு செல்லுவோம். "கர்த்தருடைய ஜெபம்" என்று சொல்லுவதற்குத் தகுதியான ஒரு பகுதி புதிய ஏற்பாட்டில் இருக்குமானால் அது இதுதான். மத்தேயு 6-ம் அதிகாரத்தில் உள்ளது ஒரு "மாதிரி ஜெபம்" அவ்வளவுதான். அந்த ஜெபத்தில் அடங்கியுள்ள வார்த்தைகளையும், வாக்கியங்களையும் அவை தரும் பொருள்களையும் கூர்ந்து கவனித்தால், அந்த ஜெபத்தைத்

திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பது அவசியமில்லாதது என்பது புரியும். ஆவிக்குரிய காரியங்களில் அவசியமில்லாதவைகளைச் செய்வதில் நாம் தான் கைதேர்ந்தவர்களாயிற்றே!.

யோவான் 17-ம் அதிகாரத் தில் ஜெபத்தை இயேசுவானவர் ஏறெடுக்கும் போது, பூமிக்குண்டான வாழ்க்கையின் கடைசி மணி வேளைகளுக்கு வந்து விட்டார். சிலுவையின் நிழல் அவர் மீது படிந்திருந்தது. அந்த நாளின் மாலை வேளையிலே தான் துரோகி யூதாசால் இயேசு காட்டிக் கொடுக்கப்படப்போகிறார். அந்த வேளையில், பரலோகத்தின் தேவனை நோக்கி பாரத்தோடு ஜெபித்தார். பிலி 2:5-ல் சொல்லுகிறபடி, நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், இந்த அதிகாரத்தைத் திரும்பத் திரும்ப வாசிப்பது நல்லது. இந்த ஜெபத்தில், அவர் இந்தப் பூமியில் வாழ்ந்த வாழ்க்கையை அப்படியே அங்குலம் அங்குலமாகத் திரும்பிப் பார்க்கிறார். அப்படித் திரும்பிப் பார்த்தவர், தான் வாழ்ந்த வாழ்க்கை பற்றி இரத்தினச் சுருக்கமாக யோவான் 17:4-ல் இப்படியாகக் கூறுகிறார். "*நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியைகளைச் செய்து முடித்தேன்*" என்று, அதாவது, தனது 12-ம் வயதில் பிதாவுக்கு அவசியமான, அவர் நியமித்த காரியங்களைச் செய்ய ஆரம்பித்தவர், தன்னுடைய இறுதி மணி வேளையில் செய்து முடித்தேன் என்று உறுதிபடக் கூறுகிறார். அவருடைய வாலிப வாழ்க்கை பற்றிய விபரம் கொடுக்கப்படாத அந்தக் கால கட்டத்திலும், அவர் பிதாவுக்கு அவசியமானவைகளையே செய்து வந்துள்ளார் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

சரி, இயேசுவானவர் பிதாவுக்கு அவசியமானவைகள் என்று எவைகளையெல்லாம் கண்டு செய்து முடித்தாரோ, அவைகள் என்ன வென்று நாம் தெரிந்து கொண்டால், நாமும் இயேசுவைப் போல், பிதாவுக்கு அவசியமானவைகளில் நம்மை ஈடுபடுத்த உதவியாக இருக்கும். அப்படித்தானே, ஆகவே, கர்த்தருடைய ஜெபமாகிய யோவான் 17-ம் அதிகாரத்தில், அவர் எவைகளையெல்லாம் செய்து முடித்ததாக சொல்லியிருக்கிறார் என்று சிலவற்றை இங்கே பார்ப்போம்.

## I உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன் (யோவான் 17:6)

"என் பிதாவுக்கு அவசியமானவைகளில் நான் இருக்க வேண்டும்" என்று தனது 12-ம் வயதில் சொன்ன இயேசுவானவரிடமிருந்து நமக்கு கிடைக்கும் முதல் பாடம், இயேசுவானவர் தன் வாழ்க்கையில் பிதாவின் நாமத்தை வெளிப்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் என்பது.

இங்கே பிதாவின் நாமத்தை அவர் வெளிப்படுத்தினார் என்று கூறும்போது, அவர் எப்படி வெளிப்படுத்தினார் என்ற நியாயமான கேள்வி வருகிறது. பிதாவின் நாமத்தை வெளிப்படுத்தும்படியாய் அவர் செய்த முதல் காரியம், பிதாவின் நாமத்தைத் தான் தரித்துக்கொண்டது. ஆம், இயேசுவை யோசேப்பின்

குமாரன், மரியாளின் குமாரன், தச்சனுடைய குமாரன் என்று சமுதாயம் சொல்லிக் கொண்டிருந்த நாட்களில் (மாற் 6:3). இவன் தன்னை "தேவனுடைய குமாரன்" என்று துணிந்து கூறிப் பிதாவின் நாமத்தை வெளிப்படுத்தினார் (யோவான் 10:36). இரண்டாவது, தான் தேவனுடைய குமாரன் என்பதைப் பிசாசு களும் அறிந்து கொள்ளும்படி செய்து அவர் நாமத்தை வெளிப் படுத்தினார். எப்படியெனில், பிசாசானவன் வனாந்திரத்தில் இயேசுவை சோதித்த போது, "நீர் தேவனுடைய குமாரனேயா னால், நீர் தேவனுடைய குமாரனேயானால்" என்று திரும்பத் திரும்பக் கூறியுள்ளான் (மத். 4:2,6)

மூன்றாவது, தன்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னது அவருடைய உயிருக்கே உலை வைத்த போதும், உறுதிகாட்டி தேவனுடைய நாமத்தை வெளிப்படுத்தினார். உண்மையில், தன்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னது அவர் சிலுவைக்குச் செல்லும்படியான பாதையை அமைத்துக் கொடுத்தது (லூக். 22:70,71). ஆனால், இயேசுவானவர் சிலுவைப் பாடுகளை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ள வில்லை. மாறாக, தான் தேவனுடைய குமாரன் தான் என்பதிலும், கிறிஸ்து தான் என்பதிலும் உறுதியாய் இருந்தார்.

அருமையானவர்களே, கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை நம்மிலும் இருக்க வேண்டுமானால்,தேவனுடைய நாமத்தை வெளிப்படுத்துவதில் நாமும் இயேசுவைப் போல் செயல்பட வேண்டும். இயேசுவைப் போல் அவருடைய நாமத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும். அது எப்படி? யாரெல்லாம் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தை அப்படியே ஏற்றுக் கொண்டு, கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே, கிறிஸ்துவுக் குள்ளாக்கும் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்களோ (கலா 3:26,27). அவர்களெல்லாரும் கிறிஸ்துவைத் தரித்து அதன் மூலம் தேவனுடைய புத்திரர் என்ற அந்தஸ்தைப் பெறுகிறார் கள். அப்படிப் பெற்றவர்கள் கிறிஸ்துவை எங்கும் அறிவிக்கும் படியான ஊழியப் பணியில் இயேசுவைப் போல் தங்களை ஈடு படுத்துவது அவசியம். அப்படி, தேவனுடைய நாமத்தை வெளிப் படுத்துவதற்கும், கிறிஸ்துவை அறிவிப்பதற்கும் தடைகள் வந்தால் இயேசுவைப் போல் உறுதி காட்ட வேண்டும்.

இப்படி நாம் செயல்படுவோமானால் மட்டுமே பிதாவுக்கு அவசியமானவைகளில் நாம் நம்மை ஈடுபடுத்தியிருக்கிறோ மென்று ஏற்றுக்கொள்ளப்படும்.

**II உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தினேன் (யோவான் 17:4)**

"என் பிதாவுக்கு அவசியமானவைகளில் நான் இருக்க வேண்டும்" என்று தனது 12-ம் வயதில் சொன்ன இயேசுவான வரிடமிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், இயேசுவான வர் பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்தியிருக்கிறார் என்பது.

இயேசுவானவர், பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்தினார் என்று சொல்லும்போது, எப்படி மகிமைப்படுத்தினார் என்ற கேள்வியும் வருகிறது? குறைந்தது, இரண்டு காரியங்களின் மூலமாக இயேசுவானவர், பிதாவை மகிமைப்படுத்தியிருக்கிறார் என்று நாம் கூறமுடியும். முதலாவது, தான் மாம்சத்தில் வந்ததன் மூலமாக. "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தி யத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா 1:14). யோவான் அப்போஸ்தலன் இயேசுவானவர் மாம்சத்தில் வந்தது தேவனை மகிமைப்படுத்தும் ஒரு செயல் என்று கூறுகிறார். இரண்டாவது, யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன், "....ரபீ, நீர் தேவனிடத்தி லிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில், ஒருவனும் தன்னிடத்தில் தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான்" என்றான் (யோவா 3:2). அதாவது, இயேசுவின் ***கிரியைகள்***, தேவனை மகிமைப்படுத்துவதாக உள்ளது என்று அந்த அதிகாரி கூறியுள் ளான்.

இப்படித் தன் மாம்ச பிறப்பின் மூலமும், மாம்சமாக வந்து செய்த கிரியைகளின் மூலமாகவும் பிதாவை மகிமைப்படுத்தின இயேசுவானவர், கெத்சமனே ஜெபத்தின் போது, அவரை முடிவாக மகிமைப்படுத்தும்படியான விளிம்பில் நின்றிருந்தார். ஆகவே தான், அந்த ஜெபத்தின் ஆரம்பத்திலேயே, "...உம்மு டைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு, நீர் உம்மு டைய குமாரனை மகிமைப்படுத்தும்" என்று கூறி ஜெபித்தார் (யோவா 17:2). இங்கே அவர் குறிப்பிடும் மகிமை, மகிமையின் மகுடமாக இருக்க போகும் மகிமை. ஆம், கொல்கொதா மலைக் காட்சியை மனதில் கொண்டவராகத் தான், உம்மை நான் மகிமைப்படுத்தும்படி என்னை மகிமைப்படுத்தும் என்று ஜெபிக் கிறார். ஒரு செயலின் மூலமாக பிதாவும், குமாரனும் மகிமை அடையப் போகிறார்கள். இதன் மூலம் இயேசுவானவர் பூமிக்கு வந்ததன் நோக்கம் இங்கே நிறைவேறப்போகிறது. இது ஒரு சாதாரண நிகழ்வு அல்ல. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் பாவ மனிதன் தேவனோடு ஒப்புரவாகும் இந்த சம்பவத் தை உற்றுப்பார்க்க தேவ தூதரும் ஆசையாயிருந்திருக்கிறார்கள் (1பேது 1:12).

எப்படியெனில், எல்லா வல்லமையும், அதிகாரமும் கொண்ட தேவாதி தேவன், இந்தப்பாழும் உலகத்தை ரட்சிக்க தம்முடைய ஒரே பேறான குமாரனை, பரலோக மகிமையைத் துறக்கச் செய்து, பூமிக்கு அனுப்பி, பாவமறியாத அவரை சிலுவைக்கு ஒப்புக் கொடுத்து இவ்வளவு பெரிய செயலைச் செய் கிறார் என்பது, பிதாவை மகிமைப்படுத்தும் ஒன்றாக உள்ளது. அத்தோடு, தேவனுக்குச் சமமாக இருந்தவர், பிதாவின் சித்தம் நிறைவேற்றும்படியாய், தம்மைத்தாமே வெறுமையாக்கி,

அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலாக வந்து, கீழ்ப் படிந்தவராகி, சிலுவை மரணத்தையும் ஏற்றுக்கொண்டார் (பிலி. 2:6-8) என்பது கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் செயலாக உள்ளது. அப்படித்தானே.

அன்பானவர்களே, தன்னுடைய 12-ம் வயதில் பிதாவுக்கு அவசியமானவைகளில் தன்னை ஈடுபடுத்தினவர், சொல்லப் போனால், தன்னுடைய பிறப்பு முதலே பிதாவின் சித்தம் செய்ய ஒப்புக் கொடுத்தவர், மரணபரியந்தம், பிதா மகிமைப்படும்படி யான காரியங்களைத் தொடர்ந்து செய்து வந்துள்ளார். நாம் எப்படி? நம்முடைய ஆவிக்குரிய பிறப்பின் மூலமும், ஆவிக்கு ரிய வாழ்க்கையின் செயல்கள் மூலமாகவும், பிதாவின் சித்தத் தை நம்முடைய பக்தி வாழ்க்கையிலும், சபை வாழ்க்கையிலும் நிறைவேற்றுவதன் மூலமும் பிதாவை மகிமைப்படுத்திக் கொண் டுள்ளோமா?.

தேவனுடைய கரங்களின் கிரியைகள் (சங்கீதம் 19:1), சிருஷ்டிப்பு தொடங்கி தேவனை மகிமைப்படுத்திக் கொண்டிருக்கும் போது, தேவனுடைய ஆவிக்குரிய படைப்புகளாகிய நாம் தேவனை மகிமைப்படுத்தாமலிருப்பதில் தேவன் பிரியப்படு வாரா? தேவனை மகிமைப்படுத்துவது இயேசுவுக்கு அவசியமா யிருந்தது போல், நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

## III உம்முடைய வார்த்தைகளைக் கொடுத்தேன் (யோவா 17:14)

"என் பிதாவுக்கு அவசியமானவைகளில் நான் இருக்க வேண்டுமென்று" தனது 12-ம் வயதில் சொன்ன இயேசுவானவரி டமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், பிதாவின் வார்த்தைகளை தன்னோடிருப்பவர்களுக்குக் கொடுப்பதை அவசியம் என்று கண்டார் என்பது.

சிலுவைக்கு முன்னான தன்னுடைய ஜெபத்தில் இயேசுவா னவர், "நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத் தேன்" (17:14) என்று கூறுகிறார். மேலும், "நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை அவர்களுக்குக் கொடுத்தேன்" என்கிறார் (17:8). மூன்றரை ஆண்டு காலம் தன்னோடிருந்தவர்களுக்கு வேறெதை யும் அவர் கொடுக்கவில்லையா? ஆகாரம் கொடுக்கவில்லை யா? அற்புதங்களைச் செய்யும் வல்லமையைக் கொடுக்கவில்லை யா? எல்லாவற்றையும் கொடுத்தார். ஆனால், அவை எல்லாவற் றைக் காட்டிலும், "பிதாவின் வார்த்தைகளைக் கொடுத்ததை இயேசு இங்கே முக்கியப்படுத்துகிறார். தன்னுடைய சீடர்களுக்கு உபதேசித்துக் கொடுத்த வார்த்தைகள் அனைத்தும் என் பிதாவின் வார்த்தைகள் என்று கூறுகிறார். ஆனால், இன்றைக்கு மத உலகில் என்ன நடக்கிறது! எரேமியாவின் நாட்களில் நடந்தது போல, "தங்கள் நாவின் சொல்லையே வழங்கி" கர்த்தர் உரைத்தார் என்று பொய்த் தீர்க்க தரிசனம் அல்லவா உரைத்துக் கொண்டுள்ளார் கள். இவர்கள் என்ன இயேசுவைக் காட்டிலும் மேலானவர்களா? (எரே 23:31).

தனது 12 வயதில் பிதாவின் சித்தம் செய்ய ஒப்புக்கொடுத்த இயேசுவானவர், இப்பூமியின் வாழ்க்கையில் பிதாவை மாத்திரம் வெளிப்படுத்தாமல் அவருடைய வார்த்தை களையும் அப்படியே வெளிப்படுத்தியுள்ளார். ஏன் அவருடைய வார்த்தைகள் அவ்வளவு முக்கியமானவை? ஏனெனில், இயேசுவானவர் பிசாசினால் சோதிக்கப்பட்டபோது, "....மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று கூறியுள்ளார் (மத். 4:4). மேலும், சீமோன் பேதுரு, "...ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்று கூறியுள்ளார் (யோவா 6:68). இப்படி மனுஷனுக்கு, ஆவிக்குரிய பிழைப்பாகவும், நித்திய ஜீவனுக்கானதாகவும் இருக்கும் தேவ வசனங்களைக் கொண்டு தான் பெந்தெகொஸ்தே நாள் பிரசங்கத்தில் பேதுரு 3000 பேரை இரட்சிப்புக்குள் வழி நடத்தினார் (அப். 2:14). எல்லாவற்றுக்கும் மேலாக, இயேசுவைக் கொண்டு பிதாவானவர் பேசின வார்த்தைகள் தான், பூமியின் மக்களைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்க இருக்கிறது (யோவா 12:48) இன்னும், தேவனுடைய வார்த்தைகள் எல்லாவற்றுக்கும் போதுமானதாக உள்ளது என்று பவுலடியார் கூறுகிறார். (2தீமோ 3:16,17). பிதாவின் வார்த்தைகள் முக்கியமானவைகள் என்பதற்கு இதை விட வேறென்ன வேண்டும்?.

அருமையானவர்களே, இப்படிப்பட்ட பிதாவின் வார்த்தைகள், நம்முடைய வாழ்க்கையில் எந்த இடத்தில் உள்ளது? பரலோகத்திற்கான நம்முடைய பக்தி வாழ்க்கையில் அவைகளுக்கு எப்படிப்பட்ட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது? ஏசாயா தீர்க்கன், "....ஆனாலும், சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்" (ஏசா 66:2) என்று ஆவியின் ஏவுதலினாலே கூறியுள்ளாரே. அப்படியானால், நாம் உண்மையாகவே இயேசுவைக் கொண்டு பிதாவானவர் கொடுத்த வசனங்களுக்கு நாம் நடுங்குகிறோமா? சொல்லுங்கள். நடுங்கினால் தானே, அவைகளுக்கு முழுமையாகக் கீழ்ப்படிவோம். கீழ்ப்படிந்தால் தானே மற்றவர்களுக்கு எடுத்துச் செல்லுவோம். இயேசு, எதற்காகப் பிதாவின் வார்த்தைகளை சீடர்களுக்குக் கொடுத்தார்? அலமாரியில் தூக்கி வைப்பதற்கா அல்லது பெட்டியிலே போட்டு பூட்டி வைப்பதற்கா? எதற்காக? சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷ வார்த்தைகளைப் பிரசங்கியுங்கள் என்றல்லவா கட்டளையிட்டுள்ளார் (மாற் 16:15).

ஆகையால், இயேசுவின் சிந்தையை நாம் ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்டு, பிதாவின் வார்த்தைகளை நம்மோடிருப்பவர்களுக்குக் கொடுப்பதில் நாம் அக்கறை காட்டுவோம். அது, பிதாவுக்கு அவசியமானபடியால், இயேசு அப்படிச் செய்தார். நாமும், இயேசுவைப் போல பிதாவுக்கு அவசியமானவைகளான அவர் நாமத்தை வெளிப்படுத்துவதிலும், அவர் நாமத்தை மகிமைப்படுத்துவதிலும், பிறருக்கு அவர் வார்த்தைகளைக் கொடுப்பதிலும் நம்மை ஈடுபடுத்துவோமாக! ஆமென்.

**E.Z.S. இராஜநாயகம்**

# பாடுவது எப்படி?

இப்பாடத்தில் "எப்படிப் பாடுவது" என்று பார்ப்போம். நாம் ஆராதனை பற்றியும், ஆராதனையில் இருக்க வேண்டிய வித்தியாசமான பங்குகள் பற்றியும் படித்து வருகிறோம். அது மாத்திரமல்ல, அவைகளின் முக்கியத்துவம் பற்றியும், ஒவ்வொரு பங்கையும் எப்படிச் செய்வது என்பது பற்றியும் விவாதித்து வருகிறோம்.

நாம் கிறிஸ்தவர்களாயிருந்து தேவனை ஆராதிக்கும் போது நாம் பாட வேண்டுமென்று வேதாகமம் திட்டமாகப் போதிக்கிறது. நாம் தேவனைத் துதித்துப்பாட வேண்டுமென்று நினைக்கும் போது, இது சம்பந்தமாக நிறைய வேத வசனங்களை நாம் குறிப்பிட முடியும். எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு பவுல் "*சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப் பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி*" (எபே. 5:19) என்று கூறுகிறார். அவரே, கொலோசே பட்டணத்தாருக்கு, "*கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப் பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் போதித்துப்புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரை பக்தியுடன் பாடி*" என்கிறார் (3:16) இந்த இரண்டு வசனங்களில் பவுல் சங்கீதங்களினாலும், ஞானப்பாட்டுகளினாலும் பாடுங்கள் என்றும், இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம் பண்ணுங்கள் என்றும் கூறுவதை நீங்கள் கவனியுங்கள். இது கர்த்தர் அவருடைய பிள்ளைகள் வாய் வழியாகப் பாட வேண்டுமென்று விரும்பியதையே குறிப்பிடுகிறது. இதையே வேறுவிதமாகச் சொன்னால், பாடும் போது இசைக்கருவிகள் இருந்திருக்கக்கூடாது என்று தெரிகிறது. பெரும்பாலான மார்க்க பிரிவினைச் சபைகள் இன்றைக்கு தங்கள் ஆராதனைகளில் இசைக்கருவிகளை பயன்படுத்துவதால் நம்முடைய காலத்துக்கு இது விநோதமாகத் தெரியலாம். ஆனால், வேதாகமம், ஆராதனையில் இசைக்கருவிகள் உபயோகிப்பதை நியாயப்படுத்தவோ அல்லது ஊக்கப்படுத்தவோ இல்லை.

முதலாவது, உலகில், இரண்டு வகையான இசை இருப்பதை நீங்கள் பார்க்கலாம். ஒன்று மற்றதைக் காட்டிலும் பழமையானது. குரல் இசை, ஒருவனது குரல் நாளங்களைக்

கொண்டு, இந்த இசை உண்டாக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு இசை மனிதனால் உண்டாக்கப்பட்டுள்ளது. அது கருவிகளின் மூலம் வரும் இசை. ட்ரம்களை அடிப்பதன் மூலம், வயலின் போன்ற கருவிகளை மேலும் கீழும் இழுப்பதன் மூலம் மனிதனால் உண்டாக்கப்படுபவை. இவைபோக, பியானோ, ஆர்கன் என்று பல வகையான இசைக்கருவிகளும் உண்டு. ஆனால், அவை யாவும் உயிரற்றவை. அவைகளுக்கு இருதயம் இல்லை. ஆனால், யாரோ ஒருவர் எடுத்து கையாளுவதன் மூலம் அவைகள் சப்தங்களை உண்டாக்குகின்றன. இப்பொழுது இவ்விரண்டில் கர்த்தர் எதைக் கேட்கிறார். இருதயத்தில் பக்தியுடன் பாடிக் கீர்த்தனம் பண்ணவேண்டுமென்று பவுல் சொல்லியுள்ளதை ஏற்கனவே பார்த்தோம். எபிரேய ஆசிரியர் ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம் என்று கூறுகிறார். (13:15) தேவ ஆவியைக் கொண்டு எழுதின எபிரேய ஆசிரியர் உதடுகளின் கனியைக் கொண்டு கர்த்தரைத் துதிக்க வேண்டு மென்று கூறுகிறார். அதன் பொருள், நாம் கர்த்தரைத் துதித்துப்பாடும் போது குரல் நாளங்களைக் கொண்டு பாட வேண்டுமென்பது. இதை நாம் இப்படிக் கூற முடியும். கர்த்தர், அவரால் உருவாக்கப்பட்டவர்கள் தான் அவரைத் துதிக்க வேண்டுமென்று கூறுகிறார். மனிதனால் உண்டாக்கப்பட்டவைகளைக் கொண்டல்ல. தன்னைத் துதிக்க உயிருள்ளவை வேண்டுமென்று தான் கர்த்தர் கேட்கிறார். செத்துப் போய் உயிரற்றிருப்பவைகளைக் கொண்டல்ல.

ஆனால், சிலர் இரண்டுக்கும் ஒரு வித்தியாசமுமில்லையென்று சொல்வர். கவனிக்க வேண்டியது யாதெனில், ஆராதனைக்கு என்ன தேவையென்பது கர்த்தருக்குத் தெரியும். ஆகவே, நாம் அவருடைய விருப்பத்திற்கு இணங்க வேண்டும். இது நம்மை பிரியப்படுத்துகிற காரியமோ அல்லது மனிதனைப் பிரியப்படுத்துகிற காரியமோ அல்ல, மாறாக, இது கர்த்தர் பிரியப்பட வேண்டிய ஒன்று. நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன் என்று பவுல் கூறியுள்ளார் (1கொரி. 14:15)

உலக சரித்திரத்தின்படி, முதலாம் நூற்றாண்டு சபையில் தேவனை ஆராதிக்கும்போது, குரல் இசை மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், சில நூற்றாண்டுகள் கழித்து மதத் தலைவர்கள் ஆராதனையில் கருவி இசையைப் புகுத்தியிருக்கிறார்கள். அக்கால கட்டத்தில் அது பெரும்பாலானவர்களால் அங்கீகரிக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் நாம் கர்த்தரை ஆராதிப்பதாக இருந்தால் ஆவியோடும், உண்மையோடும் ஆராதியுங்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளபடி ஏன் ஆராதிக்கக் கூடாது? (யோவான். 4:24).

ஆராதனையில் ஏன் இசை கருவியை உபயோகிக்க வேண்டுமென்று நிறைய விளக்கங்கள் கொடுக்கப்படுகிறது. அவைகள், தர்க்க ரீதியாகவும் பொது அறிவின் படியாகவும் உள்ளதே தவிர, எதுவுமே தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் இல்லை.

கிறிஸ்தவம், தனித்துவம் உள்ள ஒரு மார்க்கம். அத்தோடு அது பாடும் மார்க்கம். பாடல் கர்த்தரைத் துதிக்கும்படியாக மாத்திரமல்ல, கூடி வருகிறவர்களுக்கும் இதைக் கொண்டு போதித்து புத்தி சொல்ல முடியும். இன்னும், ஒரு ஆராதனையின் உச்ச நிலைக்கு இது கொண்டு செல்லும்.

ஆகையால், கர்த்தரை ஆராதிக்கும்படியாக கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் கூடி வரும்போது தேவனைத் துதிப்பதற்கு ஆராதனையில் உள்ள பங்குகளில் பாடுதலும் ஒன்றாக இருக்க வேண்டும். ஓரிடத்தில் கிறிஸ்தவர்கள் கொஞ்சமாக இருந்தாலோ அல்லது அதிகமாக இருந்தாலோ, பொதுவாக ஒருவரோ அல்லது மேற்பட்டவரோ பாடலை வழி நடத்த முடியும். ஆகையால், ஓரிடத்தில் கிறிஸ்துவின் சபையைத் தொடங்கும் முயற்சியில் நீங்கள் இருந்தால் அங்குள்ள ஆண் அங்கத்தினர்கள் தங்களுள் ஒருவரை தெரிந்து கொண்டால், வசனங்களினடிப்படையில் ஆவிக்குரிய பாடல்களில் அவர் வழி நடத்த முடியும்.

பாடுவதற்காக பாடல்களைத் தெரிந்தெடுக்கும் போது எல்லோருக்கும் தெரிந்த பாடலாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். ஆனால், கண்டிப்பாக அவை வசனங்களினடிப்படையில் இருக்க வேண்டும். அதாவது அந்தப் பாடல்களில் உள்ள செய்தி வேத வசனங்களின் உபதேசத்துக்கு ஒத்து வர வேண்டும். நீங்கள் தவறானதைப் பாடி, தவறானதைப் போதிக்க முடியும். ஒருவன் பாடும் போது, அந்தப் பாடலின் செய்தியை தியானிக்க வேண்டும். தன்னைச் சுற்றிலுமிருப்பவர்களுக்கும், தனக்கும் போதிக்கும்படியாக அந்தப் பாடலைப் பாட வேண்டும்.

மொத்தம் எத்தனை பாடல் இருக்கலாம் என்பதற்கு குறிப்பிட்ட அளவு எதுவும் இல்லை. அது பாடலை நடத்துபவரையும், இருக்கின்ற நேரத்தையும் பொறுத்தது. பொதுவாக, பாடலை நடத்துபவர் சபையாருக்கு முன்பாக நிற்க வேண்டும். மேற்கத்திய நாடுகளில் பொதுவாக ராகங்களுக்கான குறிப்புகளடங்கிய பாடல் புத்தகங்களை கிறிஸ்தவர்கள் உபயோகிக்கிறார்கள். அந்த ராகக் குறிப்புகளை ஒருவன் அறிந்திருந்தால் முறையாகவும் சரியாகவும் அவனால் அந்தப் பாடலைப் பாட முடியும். சில நேரங்களில் பாடலை வழி நடத்த கை அசைவுகளை உபயோகப்படுத்தலாம். பாடலை நடத்துபவர் தான் ஏற்கனவே கற்றுக் கொண்ட ராகத்தின் படியாக நடத்தலாம்.

ஒட்டுமொத்த சபையும் பாடல்களில் பங்கு பெறவேண்டும். எல்லோரும் சேர்ந்து பாடும்போது ஒரு வேளை அது உலகத்திலேயே சிறந்த பாடலாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், அது இருதயத்திலிருந்து பாடப்படுமானால் அது கண்டிப்பாக கர்த்தருக்குப் பிரியமானதாக இருக்கும். நாம் பாடலைப் பாட விரும்பினாலும் அதன் மூலம் நாம் உற்சாக மடைந்தாலும் நாம் நம்மை குஷிப்படுத்துவதற்கு பாடலைப் பாடுவதில்லை. தனியாகப் பாடுவதற்கோ, குழுவாக பாடுவதற்கோ நாம் சபையாகக் கூடி வருவதில்லை. மாறாக நாம் ஒட்டு மொத்த சபையாகச் சேர்ந்து சபையின் ஆராதனையில் பாட வேண்டும்.

சில சமயங்களில் நமது பாடல்கள் இருக்க வேண்டிய அளவுக்கு இல்லையென்றால், நாம் பாடல் பயிற்சிக்காக கூடி வரவேண்டியிருக்கலாம். நாம் சில பாடல்களை புதிதாக கற்றுக் கொள்ள வேண்டியிருக்கலாம். அது திரும்பத் திரும்பப் பாடுவதன் மூலம் தான் முடியும். யார் நன்றாக பாடுகிறார்கள் என்பதற்காக நாம் முயற்சிப்பதில்லை. ஆனால் இது கர்த்தருக்காக செய்யப்படும் காரியமாக உள்ளபடியால் நாம் செய்வது சிறப்பாக இருக்க வேண்டுமென்பதற்கு இப்படிச் செய்கிறோம். கருத்தருக்காகச் செய்யப்படுவது ஏனோ தானோ என்று இருக்கக் கூடாது என்பது தான் இதன் நோக்கம். வேத வசனங்களின் படி சபையாகப் பாடுவதில் பெண்கள் பங்கு பெறலாம். ஆனால், அவர்கள் வெளிப்படையாகப் பாடலை நடத்துவதற்கு வேதத்தில் கட்டளையோ, முன்னுதாரணமோ இல்லை. சபையில் பெண்களின் பங்கு என்ன என்பதை பிறகு பார்ப்போம்.

நமது இளம் சகோதரர்களை பாடல்களை நடத்தும்படி நாம் ஊக்கப்படுத்துவது அவசியம். அப்படிச் செய்ய அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுப்பதின் மூலமோ அல்லது மூத்த ஒரு சகோதரருடன் சேர்ந்து சிறப்புப் பயிற்சி பெறுவதின் மூலமோ இதைச் செய்ய முடியும்.

**J.C. CHOATE**

## ஆமோஸ் தீர்க்கதரிசனத்தின் தரிசனங்கள்

| | | |
|---|---|---|
| 1. | பட்சிக்கும் வெட்டுக்கிளிகள். | ஆமோஸ் 7:1-3 |
| 2. | பட்சிக்கும் அக்கினி. | ஆமோஸ் 7:4-6 |
| 3. | தூக்கு நூல். | ஆமோஸ் 7:7-11 |
| 4. | பழங்களுள்ள ஒரு கூடை. | ஆமோஸ் 8:1-10 |
| 5. | பலிபீடத்தின் மேல் ஆண்டவர். | ஆமோஸ் 9:1-10 |

பெண்கள் பகுதி

# வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை

(சென்ற மாதத் தொடர்ச்சி)

## ஏன் சிலர் வாலிபத்திலே சிருஷ்டிகரை நினைப்பதில்லை?

பிள்ளைகள் தேவனுடைய வார்த்தைகள் பற்றி கற்றுக் கொள்வது மிக மிக அவசியமான ஒன்று. சில குடும்பங்களில், பிள்ளைகள் குறிப்பாக வாலிபப் பிள்ளைகள் சுத்தமாகவே தேவ னற்ற குடும்பச் சூழலில் வளர்க்கப்படுகிறார்கள். அவர்களுடைய பெற்றோர்கள் ஒழுங்காக சபைக்கு செல்லாதவர்களாக இருக்கி றார்கள். தன்னடைய தந்தை வேதத்தைப் படிப்பதையோ, தாய் தங்களுக்கு வேதாகமக் கதைகளை கற்றுக் கொடுத்ததையோ அவர்கள் ஒருபோதும் கேட்டதேயில்லை. இப்படிப்பட்ட இளைஞர்கள் ஏனோக்கைப் போன்ற தகப்பனைப் பெறவில்லை. ஏனோக்கு தன் வாழ்வில் தேவனோடு சஞ்சரித்தான் (ஆதி. 5:21-24) என்று பார்க்கிறோம். துரதிஷ்ட வசமாக இவர்கள் ஆபிரகாமைப் போன்ற தகப்பனைப் பெறவில்லை. ஆபிரகாம் தன் பிள்ளைகளுக்கு தேவனின் வழியை காத்து நடக்கும்படி யாகக் கட்டளையிட்டான் (ஆதி. 18:19) தேவனைப் பின்பற்றும் படியாக உறுதியாக நின்ற யோசுவாவைப் போன்ற குடும்பத் தலைவனையும் (யோசுவா 24:15) இவர்கள் பெறவில்லை. நீதியைச் செய்யத் தூண்டின யோசபாத், அன்னாள், எலிசபெத், மரியாள், லோவிசாள், ஐனிக்கேயாள் போன்ற தாய்மார்களும் இன்று இல்லை.

அநேக வாலிபப்பிள்ளைகள் இன்று தேவனை நினைக்காத தற்கு காரணம் தேவனை நேசிப்பதை விட மாம்சத்தை, உலகத் தை மிக விரும்பிச் செல்கின்றனர். உண்மைக் கிறிஸ்தவனாக மாறிவிட்டால் ஒருவேளை ஜனங்களிடம் நன்மதிப்பை இழந்து விடுவோமோ என்ற ஐயம் ஒருபுறம். ஆகவே, சாத்தானுக்கு சேவை செய்ய அநேக வாலிபர்கள் தங்களை விற்றுக் கொண்டி ருக்கிறார்கள். உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்கிறவன் தேவனுக் குப் பகைஞனாயிருக்கிறான் (யாக்கோபு 4:4) தீய செயல்களைச் செய்யும்படி தன் மக்களைத் தூண்டும் தகப்பன்மார்கள் இன்றும் உண்டு. இன்றைய நாகரிகம் என்னும் போர்வையிலே எத்தனை தாய்மார்கள் தன் பெண்பிள்ளைகளை குடிக்க வைத்து, நடன மாடச் செய்து, ஆண்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அநாகரீகமான உடைகளை உடுக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

பவுல் இது பற்றி, "மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" என்று கலாத்தியர் 6:7-8ல் மிகப் பளிச்சென்று விளக்கிவிட்டார்.

பழைய ஏற்பாட்டிலே வாலிபனான யோசேப்புக்கு சோதனை வந்தபோது அவன் என்ன செய்தான்? (ஆதியாகமம் 39) நல்மனச் சாட்சியுள்ளவனாக "இல்லை" என்று திட்டமும், தெளிவுமாக கூறிவிட்டான், அந்த இல்லை என்ற சப்தம் அநேக நூற்றாண்டுகள் வரை தொனித்துக் கொண்டேயுள்ளது. ஒரு வேளை அந்த சூழ்நிலைக்கு அவன் "ஆம்" என்று சொல்லியிருப் பானானால் மகா புத்திசாலியான யோசேப்பை நாம் என்றோ மறந்திருப்போம்.

அநேக வாலிபப்பிள்ளைகள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவருக்காக வாழ்வதற்கு இது சரியான நேரம் அல்ல, இன்னும் கொஞ்சம் வயதாகட்டும், தேவனுக்கேற்கும் வயது முதுமைதான் என்று தப்புக் கணக்கு போட்டுக் கொண்டுள்ளனர். நாளையத் தினத்தைக் குறித்துப் பெருமை பாராட்டாதே; ஒரு நாள் பிறப்பிப்பதை அறியாயே (நீதி. 27:1) என்னும் எச்சரிப்பை இன்று வாலிபப் பிள்ளைகளும், ஏன் பெரியவர்களும் கூட மறந்துவிடுகின்றனர்.

இளம் உள்ளங்களை சாத்தான் வேண்டாம், "பொறுத்திரு" என்கிறான். பிதாவாகிய தேவன் "இன்றைக்கே இரட்சண்ய நாள்" என்கிறார். யாருக்கு செவி கொடுக்கப்போகிறாய்? என்பது தான் உன்னுடைய நித்தியத்தை நிச்சயிக்கும்.

எவ்வாறு வாலிபத்திலே தேவனை நினைக்க முடியும்?

1. இளமையிலே வேதத்தைப் படிப்பதின் மூலம், அவன் முதுமை அடையும் போதும் அவனுக்கு அது ஞானமாக விளங்கும். திமோத்தேயுவை நினைத்துப்பாருங்கள். சிறுவயது முதல் வேத எழுத்துக்களை அறிந்தவன் என்று 2 தீமோத்தேயு 3:15)ல் பார்க்கிறோம்.

2. நன்மை, தீமை அறியத்தக்க வயது வந்தவுடன் கிறிஸ்துவுக்கு தங்களை கீழ்ப்படுத்துவதின் மூலம் வாலிபப் பிராயத்திலே தேவனை நினைத்து வாழ முடியும்.

3. நல்ல முன்மாதிரியான ஜீவியத்தின் மூலம் வாலிபத்திலே ஒருவன் தேவனுக்குப் பிரியமாய் இருக்க முடியும். தீமோத்தேயு வைப் பற்றிக் கூறும்போது அவன் லீஸ்திராவிலும் இக்கோனியா விலுமுள்ள சகோதரராலே நற்சாட்சி பெற்றவனாயிருந்தான் (அப். 16:2) நாம் யார் என்று சொல்லுகிறது எவ்வளவு முக்கிய மோ அதைவிட நம்மை யார் என்று பிறர் சொல்வதுதான் மிக

முக்கியம். உன்னுடைய ஜீவியத்தில் நம்பிக்கையில்லாத பட்சத்தில் நீ செய்கிற பிரசங்கமும், உன்னால் வரக்கூடிய எந்த பலனும் வீண் என்றுதான் மக்கள் கருதுவர்.

4. உண்மையான ஆராதனையின் மூலம் வாலிபர்கள் தேவனை நினைக்க முடியும்.தேவனைத் தேட வேண்டும் என்ற எண்ணம் சிறிதளவு இருந்தால் கூட அவன் தினமும் வேதம் வாசிப்பதற்கும், ஜெபிப்பதற்கும் கொஞ்ச நேரத்தை ஒதுக்குவான். சங்கீதக்காரன் கூறும்போது " நான் உமக்கு விரோதமாய் பாவஞ் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" (சங். 119:11) என்கிறான். வாலிபர்கள் தங்கள் விசுவாசத்தை வெளியே காட்ட சிறந்த வழி ஆராதனையில் பங்கு பெறுவது தான். அநேக இளம் வாலிபர்கள் தவறாமல் ஆராதனையில் பங்கு பெற்றதன் காரணமாக தங்கள் பெற்றோரை கிறிஸ்துவுக்குள் அழைத்து வந்திருக்கிறதை கேள்விப்பட்டிருக்கிறோம்.

5. மற்றவர்களின் மனமாற்றத்திற்காக பாடுபட்டு வேலை செய்வதின் மூலம் வாலிபர்கள் தங்கள் வாலிபத்திலே தேவனை நினைக்க முடியும். ஆம், மற்றவர்களுக்குப் பிரசங்கிக்க போகுமுன் நீ சத்தியத்தை சத்தியத்தின்படி அறிந்திருக்கிறாயா என்று சோதித்துப் பார்ப்பது மிக அவசியம். வேத வசனங்களைப் பற்றிய அறிவு, ஒவ்வொரு நாளும் உன் ஆண்டவர் இயேசுவுடன் கூட உள்ள உன் உறவு. விழுந்து போன ஆத்துமாக்கள் பேரில் உள்ள கரிசனை ஆகிய மூன்றும் உள்ள வாலிபன் இயேசு கிறிஸ்துவுக்காக ஒரு வெற்றியுள்ள வீரனாகத் திகழ முடியும்.

தன்னைத்தானே இரட்சித்துக் கொண்டு, பிறரையும் இரட்சித்துக் கொள்ளும் இந்த இரண்டு பண்புகளும் சிருஷ்டிகரை தன் வாலிபத்திலே நினைக்க உதவும் மாபெரும் சாதனங்கள் ஆகும்.

வாலிபத்திலே சிருஷ்டிகரை நினைப்பதின் மூலம் உன் வாழ்க்கை இன்பமாக மாறும். இன்றைக்கு வாலிப மக்கள் ஆபாசமான காரியங்களிலும், மதுபானங்களிலும், போதைப் பொருட்களிலுமே சந்தோஷத்தைக் தேடி அலைகின்றனர். ஆனால், பிரசங்கி. 12:1ல் கூறியபடி வாழ்கிறவனுக்கே மெய்யான சமாதானம் கிடைக்கிறது. இளமையில் தேவனைத் தேடினவர்கள் தங்களின் கடைசி நாட்களிலும் மகிழ்ச்சியான நாட்களைக் காணக்கூடும். வாலிபப் பிராயத்திலே தேவனுக்கு கீழ்ப்படிவதின் மூலம் உன் குடும்பம் மகிழ்ச்சியாக மாறும்.

இதை வாசிக்கும் அருமை வாலிப உள்ளங்களே! தினமும் வேதம் வாசித்து, ஜெபிப்பதை பழக்கமாக மாற்றிக் கொள்ளுங்கள். சபையில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் தவறாமல்

கலந்து கொள்ளுங்கள். நீ சார்ந்திருக்கும் உண்மையான சபையின் மீது பெருமிதம் கொள்ளுங்கள். ஆத்தும ஆதாய வீரர்களாக மாறுங்கள். ஒருவேளை உன் வீட்டினர் இன்னும் கிறிஸ்துவை அறியாதவர்களாக இருக்கலாம். அந்திரேயாவாக இருந்து, அவர்களை இயேசுவண்டை அழைத்து வாருங்கள். (யோவான் 1:40-42) தூய்மையான வாழ்க்கைக்கு யோசேப்பைப் பாருங்கள் (ஆதி. 39) தைரியமாய் இருக்க இளைஞன் தாவீதிடம் செல்லுங்கள் (1 சாமு :17) இளமைத் துடிப்பும், ஒப்புக்கொடுத்த ஜீவியத்திற்கும் யோசியாவைப் பாருங்கள் (2நாளாகமம் 34) எந்தச் சூழலிலும் தன் நம்பிக்கையை தேவன் மேல் வைத்த வாலிபர்களில் தானியேலை போல் வேறொருவர் இல்லை (தானி 1:8) தன் நல்ல நடத்தையின் மூலம் பிறருக்கு சாட்சியாக இருந்ததற்கு தலைசிறந்த எடுத்துக்காட்டு தீமோத்தேயு. எல்லாவற்றைக் காட்டிலும் மாபெரும் உண்மையான நன் மாதிரி நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே. வேதாகமம் அநேக நன்மாதிரிகளை உங்கள் முன்வைத்துள்ளது அதன் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வாழுங்கள். (1பேதுரு 2:21).

வாலிபத்திலே இயேசு கிறிஸ்துவையும் வசனங்களையும் சமுதாயத்திற்கு உயர்த்திக் காட்டுங்கள். அப்போது பிதாவாகிய தேவன் உங்களை உயர்த்திக்காட்டுவார்.

**ரேச்சல் இராஜநாயகம்**

## நாளும் நடப்பும்

1. +2 தேர்வு முடிவுகள் நாமக்கல் மாவட்டத்தின் ஆதிக்கத்தை ஆட்டம் காணச் செய்துள்ளது.
2. உச்சநீதிமன்ற நீதிபதியாக கபாடியா பொறுப்பேற்பு.
3. இளைஞர் காங்கிரசில் கோஷ்டிகள் கூடாது என்று ராகுல் கண்டிப்பு.
4. தமிழக அரசின் கல்விக் கட்டண அறிவிப்பால் நடுத்தர வர்க்கம் மகிழ்ச்சி.
5. இலங்கைத் தமிழர்களின் உரிமையை மேலும் பறிக்கும் முயற்சியில் ராஜபட்ச தீவிரம்.
6. 103 பேரை பலிகொண்ட லிபியா விமான விபத்தில் எட்டு வயதுச் சிறுவன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினான்.
7. 70 ஆண்டுகளுக்குப் பிறகு பிரிட்டனில் கூட்டணி ஆட்சி. புதிய பிரதமராக கேமரூன்.

வாலிபர் பகுதி

# அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான்

**பி**ரியமான வாலிப உள்ளங்களுக்கு உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதல்களை முதலாவது தெரிவித்துக்கொள்கிறேன். உங்களை இந்தக்கட்டுரையின் மூலமாக சந்திப்பது மட்டற்ற மகிழ்ச்சியை எனக்கு கொடுக்கிறது. விடுமுறை நாட்களை நீங்கள் பிரயோஜனமாக கழித்திருப்பீர்கள என நம்புகிறேன். உங்களில் சிலர் இந்த கோடை விடுமுறை நாட்களில் குளிர்ச்சியான பகுதிகளுக்குச் சென்று அங்கே இளைப் பாறியிருப்பீர்கள், மேலும் அங்கே தேவனுடைய சிருஷ்டிப் பாகிய மலர்கள், புல்வெளிகள், நீர்வீழ்ச்சிகளை கண்டு ரசித்து மிருப்பீர்கள். இவைகளை நாம் பார்க்கும்போது தேவன் எவ்வளவு அழகாக, நேர்த்தியாக, ஒழுங்காக இந்த உலகத்தை உண்டாக்கியிருக்கிறார் என்று நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்து கிறது. இதுபோன்ற இயற்கை காட்சிகள் தேவனுடைய சிருஷ்டிப் பை வெளிப்படுத்துகிறபடியால் இது தேவன் மீதான நம்முடைய விசுவாசத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும். நாங்களும் இந்த கோடை விடுமுறை நாட்களை வாலிபர்கள் பிரயோஜனமாக கழிக்கும்படியாக கோடை வாசஸ்தலங்களுள் ஒன்றான ஏலகிரி மலையில் வேனிற்கால வேதாகம முகாமை நடத்தினோம். அதில் அநேக வாலிபர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். அந்த முகாமில் நான் இந்த வாலிபர் பகுதியின் தலைப்பை எடுத்து பேசினேன். அதில் கலந்து கொள்ளாதவர்களுக்கு பிரயோஜனம் உண்டாகும்படி அதை தொகுத்து வழங்குகிறேன்.

"அவன் வானத்துக்கும், பூமிக்கும் நடுவே தொங்கினான்" என்ற தலைப்பை பார்க்கும்போது யாரோ ஒருவன் சர்க்கஸில் மக்களை பரவசப்படுத்துவதற்காக சாகச விளையாட்டுகளை செய்து கொண்டிருப்பது போல தோற்றமளிக்கிறதா? உண்மை என்னவென்றால், இங்கே ஒரு வாலிபன் தன்னுடைய பேராசை யினால், பெருமையினால், கீழ்ப்படியாமையினால் இப்படி ஒரு கோரமான மரணத்தை சந்தித்தான். அவன் யார்? அவன் யார்? என்று நீங்கள் உங்கள் உள்ளங்களில் கேட்பது எனக்குப் புரிகிறது அவன் வேறுயாருமில்லை, தாவீதின் குமாரனாகிய அப்சலோம் தான். நாமெல்லாரும் அறிந்திருக்கிறபடி தாவீது ஒரு மிகச்சிறந்த தேவதாசன். ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த தாவீதை பரலோகத்தின் தேவன் அரசனாக்கி அரியணையில் அமரச் செய்தார். வாழ்க்கையின் சில கட்டங்களில் தாவீது விழுந்து போயிருந்தாலும் பின்பு சுதாரித்துக்கொண்டு எழுந்து நிலைத்து நின்றார். அவர் தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற தாசனாக

திகழ்ந்திருக்கிறார். இப்படிப்பட்ட தேவதாசனுடைய குமாரனாகிய அப்சலோம் வானத்துக்கும், பூமிக்கும் நடுவே தொங்கி சாக வேண்டியதற்கு அவனிடமிருந்த மூன்று மோசமான பண்புகள் காரணங்களாக அமைந்தன. அவைகளை நாம் இப்போது ஒவ்வொன்றாக பார்க்கப் போகிறோம்.

## I. பெருமை

அப்சலோம் என்கின்ற பெயரின் பொருள் சமாதானத்தின் தகப்பன் ஆகும். ஆனால், இந்த அப்சலோம் தன்னுடைய வாழ் நாட்கள் முழுவதும் சமாதானமில்லாமல் தான் வாழ்ந்திருக்கிறான். இந்த வாலிபன் சாகும்போது கூட சமாதானமில்லாமல் தான் செத்திருக்கிறான். வாலிபனாகிய இந்த அப்சலோம் அழகாக இருந்திருக்கிறான். இவனுடைய அழகைப்பற்றி வேத வசனம் இப்படியாகச் சொல்கிறது. இஸ்ரவேலர் அனைவருக்குள்ளும் அப்சலோமைப்போல் சவுந்தரியமுள்ளவனும், மெச்சிக் கொள்ளப்பட்டவனும் இல்லை; உள்ளங்கால் தொடங்கி உச்சந் தலை மட்டும் அவனில் ஒரு பழுதும் இல்லாதிருந்தது (2 சாமுவேல் 14:25). இந்த அப்சலோம் பெருமை பிடித்தவனாக இருந்திருக்கிறான். பெருமை இல்லையென்றால் தன் தகப்பனாகிய தாவீதை அரியணையிலிருந்து இறக்கிவிட்டுத் தான் அதில் அமர வேண்டும் என்கின்ற ஆசை அவனுக்குள் வந்திருக்காது. பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் என்று 1பேதுரு 5:5ல் நாம் வாசிக்கிறோம். இந்த உலகத்தில் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும், அவர் பெருமையுள்ளவனாக இருந்தால் தேவன் எதிர்த்து நிற்கிறார். யாத்திராகமம் ஐந்தாம் அதிகாரத்தில் எகிப்தின் ராஜாவாயிருந்த பார்வோனிடத்தில் போய் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு வனாந்தரத்திலே பண்டிகை கொண்டாடும்படி ஜனங்களை போகவிடும்படியாக கேட்டுக்கொண்டார்கள் அதற்குப் பார்வோன் நான் இஸ்ரவேலைப் போகவிட கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன் என்று பெருமையாகச் சொன்னான். அதன் விளைவாக தேவன் அவனை வாதைகளால் வாதித்தார். நாமும் பெருமையை களைந்துவிட்டு தாழ்மையை தரித்துக் கொண்டால் தேவன் நமக்கு கிருபையை அளிப்பார்.

## II. கீழ்ப்படியாமை :

வாலிபனாக இருந்த இந்த அப்சலோம் தன் தகப்பனாகிய தாவீதுக்கு கீழ்ப்படியாமல் கலகம் பண்ணுகிறவனாகக் காணப்பட்டான். தகப்பனை கனம் பண்ண வேண்டும் என்கிற தேவனுடைய கட்டளையை மீறி ஆட்சிப் பசியில் தகப்பனுக்கு விரோதமாக கலகம் பண்ணினான். அப்சலோம் தன் தகப்பனுக்கு கீழ்ப்படிந்திருந்தால் தானாகவே ராஜபதவி அவனை தேடி

வந்திருக்கும். தேவன் ஏதேன் தோட்டத்திலிருந்தே கீழ்ப்படி யாமை வெறுத்து வருகிறார். இஸ்ரவேலின் ராஜாவாகயிருந்த சவுலைப்பார்த்து தேவன் அமலேக்கியரை சங்கரித்து, அவர்களை நிர்மூலமாக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். ஆனால், சவுல், ராஜாவாகிய ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல் தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும், அழித்துப்போட மனதில்லாமல் த்ப்பவைத்து அற்பமானவைகளும், உதவாதவைகளுமான சகல வஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப் போட்டான். இப்படி சவுல் ராஜா தேவனுக்கு கீழ்ப்படியாதபடியினால் தேவன் சவுலை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் (1சாமுவேல் 15 ஆம் அதிகாரம்). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துகூட மரணபரியந்தம் தன்னை அனுப்பின பிதாவிற்கு எல்லா விதத்திலும் கீழ்ப்படிந்தார். எனவே தான், நாம் அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் என்று எபிரெயர் 5:8ல் வாசிக்கிறோம். இஸ்ரவேல் ஜனங்கள் கீழ்ப்படியாததினால் தான் வனாந்தரத்தில் அலக்கழிக்கப்பட்டு அழிக்கப்பட்டார்கள். இந்த அப்சலோம் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனதால்தான் தனக்கு வர வேண்டிய ராஜபதவியையும், சமாதானத்தையும், இறுதியாக இந்தக்கோர மரணத்தின் மூலமாக தன் உயிரையும் இழந்து விட்டான்.

### III. பேராசை :

கடைசியாக இந்த அப்சலோம் அரியணைமீது அயராது ஆசைவைத்துக் கொண்டிருந்தான். அவனிடமிருந்த அந்த பேராசையே பெருநஷ்டமாக மாறிவிட்டது. இவன் தன் தகப்பனாகிய தாவீதுக்கு பிரியமாக நடந்திருந்தால் அடுத்து ராஜாவாகியிருப்பான். ஆனால், தன் தகப்பனை சிங்காசனத்திலிருந்து தந்திரமாக தள்ளிவிடப்பார்த்தான். மேலும் அப்சலோம் காலை தோறும் எழுந்திருந்து, பட்டணத்து வாசலுக்குப் போகிற வழி ஓரத்திலே நின்று கொண்டு எவனாகிலும் தனக்கு இருக்கிற வழக்கு முகாந்தரமாய் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காகப் போகும்போது அவனை அழைத்து, நீ எந்த ஊரான் என்று கேட்பான்; அவன் உமது அடியான் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒன்றுக்கடுத்த இன்ன ஊரான் என்றால், அப்பொழுத அப்சலோம் அவனை நோக்கி இதோ உன் காரியம் நேர்மையும், நியாயமுமாயிருக்கிறது ஆனாலும் ராஜாவினிடத்தில் உன் காரியத்தை விசாரிப்பார் ஒருவரும் இல்லை என்பான். பின்னும் அப்சலோம் வழக்கு வியாஜ்யமுள்ளவர்கள் எல்லாரும் என்னிடத்தில் வந்து, நான் அவர்களுக்கு நியாயஞ்செய்யும்படிக்கு என்னை தேசத்திலே நியாதிபதியாக வைத்தால் நலமாயிருக்கும் என்பான்.

இந்தப் பிரகாரமாக அப்சலோம் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காக வரும் இஸ்ரவேலருக்கெல்லாம் செய்து, இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்து கொண்டான் (2சாமுவேல் 15:2-6). அதுமாத்திரமல்ல, அப்சலோம் அரசனாக வேண்டும் என்கிற ஆசையில் தன் தகப்பனாகிய தாவீதுக்கு விரோதமாக போர்த் தொடுத்தான். ஆனால், தாவீது தேவனுடைய மனுஷனாக இருந்தபடியினால் அந்தப் போரிலே அப்சலோம் தோல்வியைத் தழுவினான். போரில் அப்சலோம் கோவேறு கழுதையின் மேல் ஏறி வரும்போது அந்தக் கோவேறு கழுதை ஒரு பெரிய கர்வாலி மரத்தின் கீழ் வந்ததினால், அவன் தலை கர்வாலி மரத்தில் மாட்டிக் கொண்டு அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான். அப்போது அவன் யோவாப்பால் குத்திக் கொல்லப் பட்டான், அவனைக் காட்டிலுள்ள ஒரு பெரிய குழியிலே போட்டு, அவன்மேல் மகாபெரிய கற்குவியலைக் குவித்தார்கள். வாலிபர்களே, வாலிபனாகிய அப்சலோமின் பெருமையும், கீழ்ப்படியாமையும், பேராசையும் அவனுடைய மோசமான, பரிதாபமான சாவுக்குக் காரணங்களாக அமைந்து விட்டன. இது நமக்கு அவசியமான பாடமாகக் காணப்படுகிறது. எனவே, மேற்கூறப்பட்ட அப்சலோமின் மோசமான குணாதிசயங்களை நாம் களைந்து போட்டு தாழ்மையையும், கீழ்ப்படிதலையும், போதுமென்கிற மனநிலையையும் பெற்றுக் கொண்டால் ஏற்ற காலத்தில் தேவன் நம்மை உயர்த்துவார்.

பென்னிமார்ட்டின்

## யோசபாத் ஜெபத்தின் சிறப்பு

**(2 நாளாகமம். 20 -ம் அதிகாரம்)**

1. **தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர்.** வசனம். 6
2. உம்முடைய சிநேகிதனாகிய ஆபிரகாமின் தேவன். வச. 7
3. தம்முடைய நாமத்திற்கென்று ஒரு பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டினவர். வசனம். 8
4. **இந்த ஆலயத்திலிருந்து ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்களுக்கு செவிகொடும்.** வசனம். 9
5. தேவரீர் வனார்திரத்தில் செய்த நன்மைகளை நினைவு படுத்தினான். வசனம். 10-11; உபா.2:4.5 ; எண். 20:21
6. **எங்களுக்குப் பெலனில்லை; நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று தெரியவில்லை.** வசனம்.12

# வேதாகம இருதயங்கள்

சிறுவர் பகுதி

**நொறுங்குண்ட இருதயம் : -**

“நொறுங்குண்ட இருதய முள்ளவர்களுக்கு கர்த்தர் சமீப மாயிருந்து நொறுங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்” (சங்கீதம் 34:18).

**சுத்த இருதயம் : -**

“தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும் நிலை வரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்”. (சங்கீதம் 51:10).

**ஞானமுள்ள இருதயம் : -**

“இருதயத்தில் ஞானமுள்ளவன் விவேகியென்னப்படு வான்”. (நீதி. 16:21).

**மூட இருதயம் : -**

“ஞானிகளின் உதடுகள் அறிவை இரைக்கும்; மூடரின் இருதயமோ அப்படியல்ல”. (நீதி. 15:7).

**உத்தம இருதயம் : -**

“ஆதலால் இந்நாளில் இருக்கிறதுபோல நீங்கள் அவர் கட்டளைகளில் நடந்து, அவர் கற்பனைகளைக் கைக் கொள்ள உங்கள் இருதயம் நம்முடைய தேவனாகிய கர்த்தரோடு உத்தமமாய் இருக்கக்கடவது என்றார்”. (1இரா.8:61).

**பெருமையுள்ள இருதயம் : -**

“மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப் பானவன் ”. (நீதி. 16:5).

**மகிழ்ச்சியான இருதயம் : -** மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம். (நீதி. 17:22).

**இளைத்துப்போன இருதயம் : -**

நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக் கப்பண்ணும். விரும்பினது வரும்போதோ ஜீவ விருட்சம் போல் இருக்கும். (நீதி. 13:12).

**சுத்த இருதயம் : -**

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனை தரிசிப்பார்கள் (மத். 5:8).

**உருக்கமுள்ள இருதயம் : -**

ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (எபே. 4:32).

அன்பார்ந்த தம்பி தங்கைகளே! விடுமுறையை முடித்து புதிய கல்வியாண்டுக்குள் செல்ல இருக்கும் உங்களுக்கு என் வாழ்த்துக்கள். நான்கு வகையான இருதயங்களைப் பற்றி கடந்த நான்கு மாதங்களாக படித்த உங்களிடம், வேதாகமத்தில சொல்லப்படும் வெவ்வேறு வகையான இருதயங்களை உங்கள் முன் வைத்துள்ளேன்.

இருதயம் முக்கியமான உறுப்பு. எனவே, இருதயத்தை சிறுவயதில் இருந்தே வசனத்தினால் நிரப்பும் பொழுது சுத்தமாகவும், சுகமாகவுமுள்ள வாழ்க்கையை வாழ இயலும். மனமகிழ்ச்சி நல்ல மருந்து.

மேற்கண்ட வசனங்களை மனப்பாடம் செய்து கொள்ளுங்கள். ஞானத்தைப் பெற்றுக்கொள்ள இது சிறந்த மருந்து.

தினமும் வேதம் வாசித்து, ஜெபிக்க மறவாதீர்கள். கர்த்தர் தாமே நம் அனைவரோடுங்கூட இருப்பாராக, ஆமென்!!

**R. ஏபில் ரோஜர் நாயகம்**

## சகரியா தீர்க்கதரிசனத்தின் தரிசனங்கள்

| | |
|---|---|
| 1. சிவப்புக்குதிரை தூதன். | சகரியா 1:8 |
| 2. நான்கு கொம்புகள், நான்கு தொழிலாளிகள். | சகரியா1:18-21 |
| 3. அளவு நூல் புருஷன். | சகரியா 2 |
| 4. பிரதான ஆசாரியனான யோசுவா. | சகரியா 3 |
| 5. பொன் குத்துவிளக்கு. | சகரியா 4 |
| 6. பறக்கிற புத்தகச் சுருள். | சகரியா 5:1-4 |
| 7. ஒரு மரக்கால். | சகரியா 5:5-11 |
| 8. நான்கு இரதங்கள். | சகரியா 6:1-8 |

# " துருவின் சாட்சி " நூலில் இருந்து

## பாடம் - 3

# கொடுத்தல் ஒரு வேதாகம பாடம்

### நோக்கம்

புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தின் தாற்பரியமே கொடுத்தல் தாற்பாரியம் தான் என்ற உண்மையை வலியுறுத்துவது.

### உங்கள் சிந்தனைக்கு

வரப்போகும் உலகத்திற்குத் தன்னை எவ்விதத்திலும் ஆயத்தம் செய்யாமல், தன் சுகபோகமான வாழ்க்கையில் உழன்று கொண்டிருப்பவனுக்கு, மரணத்தின் அழைப்பு பேரிடியாய் அமையும்.

### முன்னுரை

இதற்கு முந்தின பாடத்தில், பழைய ஏற்பாடு கொடுத்தலைப் பற்றிய ஓர் புத்தகம் என்று நாம் காட்டினோம். இப்பாடத்தில் புதிய ஏற்பாடு இந்த முக்கியமான காரியம் பற்றி என்ன போதிக்கிறது என்று பார்க்க விரும்புகிறோம். புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் கொடுத்தலைப் பற்றி அதிகமாக சொல்லுகின்றன. புதிய ஏற்பாட்டின் முதல் அதிகாரத்திலே மனிதனுக்கு தேவனுடைய கொடையாகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பற்றி பார்க்கிறோம். மத்தேயு புத்தகத்தின் இரண்டாவது அதிகாரத்தில் நமக்குத் தெரிந்தவரை மரியாளும், யோசேப்பும் தவிர, சாஸ்திரிகள் தான் இயேசுவுக்கு முதன் முதலில் கொடுத்துள்ளார்கள். இன்றைக்கு நாம் காணிக்கை கொடுப்பதும், கிறிஸ்துவுக்கான ஒரு கொடுத்தலாகவே இருக்கிறது.

சபையிலே பிரசங்கியார் ஒருவர் வெளிநாட்டு ஊழியத்திற்கு பொருளாதார உதவிகளைச் செய்யும்படி ஊக்கமான வேண்டுகோள் விடுத்தார், அப்பொழுது ஒரு பெண்மணி தன்னுடைய மோதிரத்தை கழற்றி காணிக்கைப் பையிலே போட்டுவிட்டு ஒரு காகிதத்தில் "இந்த மோதிரத்தை விற்று அந்த பணத்தை சுவிசேஷம் பிரசங்கிக்கப் பயன்படுத்துங்கள்" என்று எழுதி பையில் போட்டார். யாரோ ஒருவர் அந்த பிரசங்கியாரிடம் காணிக்கைப் பையில் மோதிரத்தை போட்டது யார் என்று சொல்லி விட்டார்கள். உடனே அந்த பிரசங்கியார் அந்த மோதிரத்தை எடுத்துக் கொண்டு அந்த பெண்ணிடம் போய் "நான் அப்படிச் செய்யமாட்டேன் என்று சொன்னார். அப்பொழுது அந்த பெண்மணி அந்த மோதிரத்தை நான் உங்களுக்கு கொடுக்க

வில்லை இயேசுவுக்குத்தான் கொடுத்தேன்" என்று சொன்னார். சபையிலே நாம் செய்வதெல்லாம் இயேசுவை மையமாகக் கொண்டும், அவருக்காகவும் செய்யப்படுகிறது.

சாஸ்திரிகளிடமிருந்து நாம் சில அருமையான பாடங்களை கற்றுக்கொள்ளலாம். சிலருக்கு இது புதுமையான பாடங்களாக இருக்கலாம். ஆனால், ஒருவர் கிறிஸ்து பற்றியும், அவருடைய ராஜ்யம் பற்றியும் கிறிஸ்துவுக்குக் கொடுத்தல் குறித்துப் பேசாமல் பேச முடியாது. நாம் வேதாகமத்தைப் படிக்கும்போது, தேவன் நமக்காகக் கொடுத்தார், கிறிஸ்து நமக்காக கொடுத்தார், பரிசுத்த ஆவியானவர் நமக்காக கொடுத்தார் என்று கற்றுக்கொள்கிறோம். ஆதி கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு விசுவாசமாயிருக்கும்படி அபரிதமாக கொடுத்தார்கள் என்று புதிய ஏற்பாட்டை வாசிக்கும் போது கற்றுக்கொள்கிறோம். இன்னும் சிலர், தங்கள் ஜீவனையே கொடுத்திருக்கிறார்கள். நான்கு சுவிசேஷங்களிலும் நாம் கொடுத் தலைப் பற்றி வாசிக்கிறோம். மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு சுவிசேஷப் புத்தகங்களில் 89 அதிகாரங் கள் உள்ளன. இவற்றில் கொடுப்பது சம்பந்தமான பாடம், நூற்றி முப்பது முறைகளுக்கும் மேல் விவாதிக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலருடைய நடபடிகள் கொடுத்தலைப் பற்றியதும், மனமாற்ற சம்பவங்களைப் பற்றியதுமான புத்தகமாகும். சபை களுக்கு எழுதப்பட்ட எல்லா நிருபங்களும் மனிதன் தேவனுக்கு கொடுக்கும்படியாய் மேலும், மேலும் உற்சாகப்படுத்துகின்றன. வெளிப்படுத்தின விசேஷப் புத்தகம் தேவன் மனிதனுக்கு ஒரு புதிய வீட்டைக் கொடுப்பதுடன் நிறைவடைகிறது.

நீங்கள் ஆதியாகமப் புத்தகத்திலிருந்து வாசிக்கத் தொடங்கி, பழைய ஏற்பாட்டின் முப்பத்தொன்பது புத்தகங்களை யும் வாசித்து, அதன்பின்பு புதிய ஏற்பாட்டில் உள்ள இருபத்தேழு புத்தகங்களை வாசித்தாலும் ஆரம்பம் முதல் கடைசி வரை வேதாகமம் கொடுத்தலைப் பற்றிய ஒரு புத்தகம் என்பதை அறிந்து கொள்வீர்கள். எனவே, ஒருவன் பிரசங்கியாரைப் பார்த்து வோதகமம் கொடுத்தலைப் பற்றி போதிக்கவில்லை என்று சொல்லும் அளவுக்கு எப்படி தேவனுடைய வார்த்தை களை அறியாதவனாக இருக்க முடியும்?. இப்படிச் சொல்லு வதும், வேதாகமத்தைப் பற்றி போதியுங்கள் ஆனால், கிறிஸ்து வைப் பற்றி போதிக்க கூடாது என்று சொல்லுவதும் ஒன்று தான்.

### I. இயேசு கொடுத்தலைப் பற்றி போதித்தார்

" பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம், இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து

வையுங்கள் அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை" (மத்தேயு 6:19,20)

பொருளாதாரத்தில் நல்ல நிலையிலிருக்கும் விசுவாசிகள் தாங்கள் கர்த்தருக்குக்கென்று கொடுக்காததற்கு சொல்லும் காரணங்களை நினைத்து நான் அடிக்கடி ஆச்சரியப்படுகிறேன். ஒருவேளை, நீங்கள் இப்பொழுது இருக்கும் நிலையிலேயே மரிக்க நேர்ந்தால், பரலோகத்தில் உங்கள் பொக்கிஷம் என்னவாயிருக்கும்? ஒரு சமயம் ஒரு பிரசங்கியார் சபையாரைப் பார்த்து இவ்வாறாகச் சொல்லக்கேட்டிருக்கிறேன். நீங்கள் ஏற்கனவே அனுப்பிக் கொடுத்த பணத்தினால் உங்களுக்காகக் கட்டப்பட்ட வீட்டிலே தான் நீங்கள் வாழப்போகிறீர்கள் என்று. அப்படிச் சொல்வது சரியானால், பெரும்பாலான கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள், தாங்கள் தூங்குவதற்கு ஒரு பாய் வாங்கக் கூட பணம் அனுப்பாததினால், பரலோகத்திலுள்ள வெட்ட வெளி யில் தான் தூங்க வேண்டியதிருக்கும். "இப்படிப் பிரயாசப்பட்டு பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதை பார்க்கிலும் கொடுக்கிற தே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தை களை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றார்" (அப். 20:35).

இயேசு, சுயநலத்தையும், தன்னையே மையமாக வைத்துச் செயல்படுதலையும், இரக்கம் காட்டாமல் வன்மையாகக் கண்டித்தார். ஐசுவரியவானாகிய விவசாயியை "மதியீனனே" என்று சொன்னதோடு. ஆசாரியனையும், அந்த லேவியனையும் கண்டித் தார். அதே நேரத்தில் சமாரியனை பாராட்டிவிட்டு, "நீயும் போய் அந்தப்படியே செய்" என்றார். இயேசு மாற்கு பன்னிரெண்டாம் அதிகாரத்தில், அந்த ஏழை விதவையைப் பாராட்டினார். ஐசுவரியவான் பாதாளத்தில் இருப்பதாகவும், லாசருவை ஆபிரகாமின் மடியில் இருப்பதாகவும் சித்தரிக்கிறார். இயேசு, விலையேறப் பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தைக் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களை துடைத்ததற் காக மரியாளைப் பாராட்டினார். அதே நேரத்தில், அதை தடை செய்த யூதாஸ் காரியோத்தை அவர் கடிந்து கொண்டார். இயேசு குறைவான காணிக்கையை ஒருபோதும் மெச்சியதில்லை. மாறாக, எதைப் பற்றியும் கவலைப்படாமல் அதிகமாக மற்ற வர்கள் வீண் செலவு என்று சொன்னாலும் பரவாயில்லை என்று கொடுத்தவர்களை மெச்சியிருக்கிறார். இயேசு போதித்தது மாத்திரமல்லாமல் தன்னுடைய வாழ்க்கையில் அவைகளை முன்னுதாரணமாக செய்தும் காட்டியிருக்கிறார். "அப்படியே மனுஷ குமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்

செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத்தேயு 20:28). மேலும், அவர் போதிக்கும்போது, அவருக்கு சீஷர்களாக இருக்க வேண்டு மென்றால், நம்மை நாம் வெறுத்து, நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டும் என்றார். "அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத்தேயு 16:24).

இயேசு ஒருவருடைய வாழ்க்கை அவன் வைத்திருக்கும் சொத்து சுகங்களைப் பொறுத்து அமைவதில்லை என்று போதித் தார். உண்மையான ஜீவியம், குவித்து வைப்பதைவிட கொடுப்ப தில் தான் இருக்கிறது என்பதை உணர்த்தினார். அந்த பணக்கார வாலிபன், உண்மையான வாழ்க்கை ஒருவருடைய உடைமை களில் உள்ளடங்கியிருக்கிறது என்று வெளிப்படையாகவே எண்ணினான். அதனால் தான் இயேசு அவனுக்குண்டானயாவற் றையும் விற்று தரித்திரருக்குக் கொடுக்க சொன்னபோது துக்க மடைந்தவனாய் போய் விட்டான். மகிழ்ச்சியை நாம் நாடுவ தினால் பெற்றுக்கொள்ள முடியாது. அந்த பணக்கார வாலிபன் எல்லோரையும் போல் மகிழ்ச்சியைத் தேடுவதால் கண்டுபிடிக்க முடியாது என்றும், அது கொடுப்பதால் கிடைக்கும் ஒன்று என்றும் தன் அனுபவத்தில் கற்றுக்கொண்டான்.

**(தொடரும்)**

## பிரசங்கி புத்தகத்தில் "நலம்"

1. ... அமைச்சலோடு ஒரு கைப்பிடி நிறையைக் கொண்டிருப்பது **"நலம்"** (4:6)
2. ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது **"நலம்"** (4:9)
3. ... செவிகொடுக்கச் சேர்வதே **"நலம்"** (5:1)
4. நேர்ந்து கொள்ளாதிருப்பதே **"நலம்"** (5:5)
5. விருந்து வீட்டிற்குப் போவதிலும் துக்க வீட்டுக்குப் பேவது **"நலம்"** (7:2)
6. நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு **"நலம்"** (7:3)
7. ஞானியின் கடிந்துகொள்ளுதலைக் கேட்பது **"நலம்"** (7:5)
8. யுத்த ஆயுதங்களைப் பார்க்கிலும் ஞானமே **"நலம்"** (9:18)

# துன்பப்படும் கர்த்தருடைய தாசன்

**ப**ரமனால் பரிசுத்தமாகப் படைக்கப்பட்ட மனிதனை, பாவம் செய்யத் தூண்டி, பாதாளத்திற்குப் பாத்திரமாய் மாற்றிய வேதாளத்தின் கூர் ஒடிக்க, வேர் பிடுங்க, புவி மீது வந்தார் பரிசுத்த ஆவியினால் உண்டான உன்னதமான தேவ குமாரன் இயேசு. வந்தவர், வறியவர் தம் அறியாமை போக்க இறை செய்தி அவர்கட்கு அறிவித்தார், மனுக்குலம் ஒருக்காலும் கண்டிராத அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார். சும்மாயிருக்குமா சுக போகக் கூட்டம்?. சதி வலை பின்னியது. சாதிக்க வந்தவரின் சரித்திரம் முடிக்க எண்ணி சிலுவையைத் தந்தது, ஞானிகளை தங்கள் ஞானத்தில் பிடிக்கிற தேவன் சிலுவையை வெற்றிச் சின்னமாக மாற்றினார். பாவப் பாதாளத்தில் கிடந்த மனிதனை பரலாகக் கரையேற்றினார்.

அறிமுகப் பாடங்களைப் பார்த்த நாம், ஏசாயா 42:1-4 வசனங்களில், கர்த்தருடைய தாசனின் பணிகள் என்ன என்பது பற்றி படிக்க ஆரம்பித்தோம். நமது ஆண்டவர் இயேசு, தேவன் ஆதரிக்கிற தாசன் என்றும், அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட வர் என்றும், அவருடைய ஆத்துமாவுக்குப் பிரியமானவர் என்றும் படித்தோம் (ஏசாயா 42:1). இப்பொழுது, நாம் தொடர்ந்து “.....என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்; அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார்”. என்கிற வசனத்தை நாம் இம்முறை கவனிப்போம்.

முதலாவதாக, “*என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணி னேன்*” என்கிற தொடரை நாம் கவனிப்போம். நமது ஆண்டவர், தனது ஊழியத்தின் துவக்கத்தில் யோர்தான் நதிக்கரையில், நீதியை நிறைவேற்ற யோவானால் திருமுழுக்கப் பெற்று கரை யேறின போது, *தூய ஆவியானவர் புறாவைப்போல் இறங்கி அவர்மேல் வந்தமர்ந்தார்.* வானம் திறந்தது, இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்ற தேவ ராகம் கேட்டது. (மத்தேயு 3:14-17) பரிசுத்த ஆவியினால் உண்டாகிப் பிறந்தவர் மேல் பரிசுத்த ஆவியானவர் வந்தமர்வதை நாம் புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் காண்கிறோம். பல நூற்றாண்டுகளுக்கு முன், ஏசாயா சொன்னது, நமது ஆண்டவரில் அப்படியே நிறை வேறுவதைக் காணலாம்.

இயேசு ஆண்டவர், தான் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்து, வழக்கத்தின்படியே ஜெப ஆலயத்திற்கு போன போது, ஏசாயாவின் புத்தகச் சுருளை வாசிக்கும் போது, கர்த்தருடைய

ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்...." (லூக்கா 4:18; ஏசாயா 61:1-2) என்கிற வசனங்களை வாசித்து முடித்த பின்பு, நமது ஆண்டவர் அங்கு கூடியிருந்தவரிடம் அந்த வேத வாக்கியம் நிறைவேறியதாக எடுத்து உரைப்பதைக் காணலாம். நாம் கவனிக்க வேண்டிய தொடர், கர்த்தருடைய ஆவியானவர் நமது ஆண்டவர் மேலிருக்கிறார்; என்பது தான். அதுவும், இவருக்கு தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார் (யோவான் 3:34).

இரண்டாவதாக, "அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார்" என்ற தொடரைப் பார்ப்போம், நமது ஆண்டவரின் ஊழியம் இஸ்ரவேலை மையப்படுத்தியிருந்தாலும், தமது ஊழியப் பாதையில் நமது ஆண்டவர் புறஜாதிகளை கண்டுகொள்ளாமல் இருக்கவில்லை. நாம் கவனித்த லூக்கா நான்காம் அதிகாரத்திலேயே நமது ஆண்டவர் சரெப்தா ஊரிலிருந்த விதவை, நாகமான் ஆகியோருக்கு தேவ அநுக்கிரகம் கிடைத்ததை குறித்து விளக்கினார். (லூக்கா 4:25-27).

லூக்கா ஏழாம் அதிகாரத்தில் நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தைக் கண்டபோது, இஸ்ரவேலுக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் கண்டதில்லை என்று நமது ஆண்டவர் புகழத் தவறவில்லை (லூக்கா 7:1-9). தன்னை நாய்க்குட்டி என்று சொன்னபோதும், ஆண்டவர் மீது விசுவாசத்தை காட்டிய தீருசீதோன் தேசத்தாளாகிய ஸ்திரீயின் விசுவாசத்தை அவர் பாராட்டத் தவறவில்லை. (மத்தேயு 15:28). தனது ஊழியப் பாதையில் புறஜாதிகளை அங்கீகரித்த நமது ஆண்டவர் தனது புதிதும், ஜீவனுமான மார்க்கத்தை சகல தேசத்தாருக்கும் அறிவிக்கும்படி கட்டளையிட்டதை நாம் கவனிக்க வேண்டும். (மத். 28:18-20). ஆகவே, யூதர் அல்லாத புறஜாதிகளாகிய நமக்கு தமது நியாயமாகிய புதிய ஏற்பாட்டை அறிவித்திருக்கி றார் நமது ஆண்டவர். அவர் எப்படி அதைச் செய்தார் என்பதை அடுத்த இதழில் கவனிப்போம்.

**(தொடரும்)** **ஜே. பிக்கின்ஸ்**

## ஆகாய் தீர்க்கதரிசன நூலில் கிடைக்கும் பிரசங்க தலைப்புகள்

1. கர்த்தருடைய ஆலயம் கட்டப்பட வேண்டும். (1:2,9)
2. கர்த்தர் பிரியப்படும் காரியம் (1:8)
3. என் மகிமை விளங்கும் (1:8)
4. அதிகம் வருமென்று எதிர்பார்த்தீர்களா (1:9)
5. தேவன் ஆசீர்வாதங்களை நிறுத்தும்போது (1:9-11)
6. திடமனதாயிருந்து வேலை செய்யுங்கள் (2:4-9)
7. தேவன் என்ன செய்வார் ( 2:6-9; 19-23)

# உண்மையான ஆவிக்குரிய தன்மை

பெரும்பாலான அமெரிக்கர்கள் தங்களைப்பற்றி அருமையான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பது நம்மை ஆச்சரியப்படுத்தக்கூடாது. பொதுவாகவே, அமெரிக்கர்கள் தங்களை சில தவறுகளுடன் கூடிய நல்லவர்களாக நினைத்துக் கொள்கிறார்கள், அதோடுகூட சில குறைபாடுகளுடன் கூடிய மனிதர்களாகவும் நினைத்துக்கொள்கிறார்கள். தேவனுடனான அவர்களுடைய உறவு என்று வரும்போது இதே விதிதான் உண்மையாகிறது. ஆகஸ்ட் 2006 ஜார்ஜ் பர்னாவின் ஆய்வின்படி பெரும்பாலான அமெரிக்கர்கள் தேவனோடு தாங்கள் மிக நெருக்கமான, அர்ப்பணிக்கப்பட்ட உறவை வைத்துக் கொள்வதாக நினைத்துக்கொள்கிறார்கள். உதாரணமாக, 88 சதவீத மக்கள் தாங்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக உணர்கிறார்கள். 62 சதவீத மக்கள் ஆழ்ந்த ஆவிக்குரியவர்கள் என தங்களைக் காண்கிறார்கள். மேலும் 59 சதவீத மக்கள் தங்களை தேவனுடைய முழுநேர ஊழியக்காரர்களாக விவரிக்கிறார்கள். எல்லாமே நன்றாகத்தான் தோற்றமளிக்கிறது. மத சம்மந்தமாக எல்லாமே நன்றாக இருக்கிறது என நாம் நினைக்கலாம். ஆயினும், நம்மை நாம் பாராட்டிக்கொள்ள ஆரம்பிப்பதற்கு முன்பாக மற்றுமொரு புள்ளிவிவரத்தை நாம் கவனிப்போம். இது ஜனவரி 2006 பர்னா ஆய்வின்படியானது. அந்த ஆய்வில் 15 சதவீத முதிர்ச்சி அடைந்தவர்கள் மாத்திரமே தேவனுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற காரியத்தில் தேவன் பேரில் நம்பிக்கை வைத்திருந்ததாக கண்டறியப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட புள்ளி விவரத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ள முடியும்? அதிகமான அமெரிக்கர்கள் தங்கள் ஆற்றலை சபைக்கு செல்வதற்கும், வேதத்தை வாசிப்பதற்கும், செலவு செய்ய முன்வருகிறார்கள், ஆகவே, அவர்கள் தாங்கள் ஆவிக்குரியவர்கள் என திருப்திபட்டுக்கொள்கிறார்கள், ஆனால், அவர்கள் தங்களை தேவனிடத்தில் உண்மையாக அர்ப்பணிக்கத் தவறுகிறார்கள்.

நாம் ஆவிக்குரிய ஜனங்களாக இருக்க விரும்புகிறோம், தேவனுடைய தயவு நமக்கு வேண்டும், ஆனால், தேவன் நம்முடைய ஜீவியங்களை ஆட்கொள்ள நாம் விரும்புவதில்லை. வேறுவிதமாகச் சொன்னால் அநேகர் தங்களுக்கேற்றபடி தேவனால் ஏற்றுக்கொள்ளபட்டிருப்பதாக உணர்கிறார்கள். அதே நேரத்தில் சிலர் தங்கள் ஜீவியங்களில் தேவனுக்கு முதலிடம் கொடுக்கிறார்கள். ஆயினும், வேதாகமம் ஒரு காரியத்தை அபரிதமாக தெளிவுபடுத்துகிறது அதென்னவென்றால் தேவனுக்

கேற்றபடி அவர் உண்மையிலேயே நம்முடைய ஜீவியங்களில் இருந்தால் நம்முடைய ஜீவியங்களில் அவர் முதலாவது இருக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட மனப்பான்மைகளை நாம் வேதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது உண்மையான ஆவிக்குரிய தன்மை என்றால் என்ன என்பதைப்பற்றி எந்த யோசனையும் இல்லாமல் அநேகர் இருப்பதை நாம் காணமுடியும். உண்மையான ஆவிக்குரிய தன்மையானது தேவனைப்பற்றி நல்ல எண்ணங்களை கொண்டிருப்பதைவிட அதிகமானது. அது எப்பொழுதாவது, ஆராதனைக்குச் செல்வதைக்காட்டிலும், வேதாகமத்தை படிப்பதைக் காட்டிலும் அதிகமானது. அது அனுதின அடிப்படையில் தேவனிடத்தில் ஜெபிபப்தைக் காட்டிலும் அதிகமானது. உண்மையாகவே, ஆவிக்குரிய தன்மையோடு இருப்பது என்பது நம்முடைய வாழ்க்கையை தேவனிடத்தில் ஒப்படைத்துவிட்டு அவருடைய கட்டுப்பாட்டின்கீழ் வாழ விரும்புவதாகும்.

அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்திற்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம். ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எப்படியென்றால் மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப் பிரமாணத்துக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள் (ரோமர் 8:5-8).

உண்மையான ஆவிக்குரிய தன்மை என்பது நம்முடைய மனதை ஆவிக்குரிய காரியங்களில் பதியச் செய்வதாகும், நம்முடைய மனதை தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்பதாகும்; நாம் நம்முடைய ஜீவியங்களை தேவனுக்கு ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பதன் மூலமாக ஆவிக்குரிய ஆராதனையை ஏறெடுக்க முடியும் (ரோமர் 12:1). இதே விதமான கருத்தை பவுல் கொலோசெயர் 3:2 லும் சொல்லியிருக்கிறார். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். வேறுவிதமாகச் சொன்னால் நாம் நம் கவனத்தை தேவன் மீதும், அவருடைய சித்தத்தின் மீதும் ஒருமுகப்படுத்த வேண்டும்.

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடும்படி கிறிஸ்து சொன்னார் (மத்தேயு 6:33). அதாவது நம்முடைய முன்னுரிமையில் தேவனுக்கு முதலிடத்தை கொடுக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், நம்முடைய மனதானது தேவனால் கட்டுப்படுத்தப்படவில்லை. எனவே, நாம் உண்மையாகவே ஆவிக்குரியவர்களாக இல்லை. அதன் பொருள் நாம் மோசமானவர்கள்

என்றல்ல, குறைந்தது மனிதன் நல்லது அல்லது கெட்டதை தீர்க்கிற விதத்தில். இதன் பொருள் என்னவென்றால், தேவன் நம்முடைய ஜீவியங்களை கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக நாம் நம்முடைய ஜீவியங்களை கட்டுப்படுத்துகிறோம்.

நம்முடைய ஆவிக்குரியத் தன்மையின் அளவானது நாம் எப்படி உணர்கிறோம் அல்லது எந்த அனுபவத்தினால் நாம் அதை பெற்றுக்கொண்டோம் என்பதை வைத்து நிர்ணயிக்கப் படுவதில்லை, மாறாக நாம் எப்படி வாழ்கிறோம் என்பதை வைத்தும், புதிய ஏற்பாடு என்ன போதிக்கிறதோ அதை நாம் எப்படி பின்பற்றுகிறோம் என்பதை வைத்தும் நிர்ணயிக்கப் படுகிறது. நம்முடைய ஜீவியங்களை கட்டுப்படுத்துவது யார்? தேவன் கட்டுப்படுத்துகிறவராக இருந்தால் அப்போது நாம் ஆவிக்குரிய சிந்தையுடையவர்களாக இருக்கிறோம், அதன் விளைவு ஜீவன். தேவன் நம்முடைய ஜீவியங்களை ஆட்கொள்ளவில்லையென்றால் நாம் மாம்ச சிந்தை உடையவர் களாய் இருக்கிறோம். அதன் விளைவு மரணம். ஆகவே, நாம் உண்மையாகவே மாம்ச சிந்தை உடையவர்களாய் இருந்து கொண்டு, நம்மை நாம் ஆவிக்குரியவர்கள் என நினைத்துக் கொண்டு, நம்மை நாம் வஞ்சிக்கவில்லை என்பதில் உறுதியாய் இருக்க வேண்டும். உண்மையாகவே, உங்கள் வாழ்க்கையை யார் கட்டுப்படுத்துகிறார்? சிந்தியுங்கள்.

**JERRY BATES** **BENNY MARTIN**

## வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

"வேதாகம அஞ்சல் வழிப்பாடங்கள்" அனுப்புங்கள் என்று M.O. செய்பவர்களும், நமது "மாத இதழுக்காக" M.O. செய்பவர்களும் M.O. படிவத்தில், தகவலுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள பகுதியில், உங்கள் **சுயவிலாசத்தைத்** தவறாமல் தெளிவாக குறிப்பிடுவது மிகவும் அவசியம். இது எங்கள் பணியை நாங்கள் சிறப்பாகச் செய்ய எங்களுக்கு உதவி செய்யும்.


***உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.***

- ஆசிரியர்

# BIBLE MEDITATION

## TV PROGRAM



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Licensed to Post without pre payment No. TN/WR/ERD/03/WPP/2009-2011
Regd. News Paper RNI No. 47661/87 Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month



முகாமில் கலந்து கொண்ட சிறுவர், சிறுமியர்



முகாமில் உணவு இடைவேளையின் போது ...




முகாமில் பகல் நேர வகுப்பின் போது ... மரத்தடியில்

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.